ஒரு புதிய மருத்துவக் கல்லூரி ஏற்பட வேண்டுமென்று சொன்னால் அதற்கு இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் வரை தேவை இருக்கிறது. இப்போது மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி, மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிப்பது சரியான செய்கையல்ல. இப்போது சேலத்திலும் திருச்சியிலும் உடனடியாக மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சி இல்லை. அதற்கு இப்போதுள்ள சூழ்நிலை இடம் தரவில்லை. மருத்துவக் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, இதிலே மாறுபாடோ, அபிப்பிராய பேதமோ, கொள்கைப் பிரச்னையோ, மற்ற எந்தப் பிரச்னையோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் அமைச்சர்களுக்குள் * * * * என்று யாராவது நினைத்தால் அது நடக்காது; முடியாது. * * இப்போதுள்ள இருக்கிற தன்மையை நான் சொன்னேன். நிதி பற்றிய முழு விவரமும் அவருக்கு, நிதியமைச்சர் என்கிற காரணத்தால் தெரியும், மருத்துவக் கல்லூரி உடனடியாக வரும் நிலையில் இல்லையென்றுதான் நான் சொன்னேன்.

(ஆ) பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அமைச்சர்கள் வெளியில் மாறுபட்ட கொள்கை விளக்கங்களை அறிவித்தது குறித்து.

Dr. H. V. Hande: On a Point of Order, Sir. When the House is in session, how is it that two Cabinet Ministers, two Senior Ministers had given in two different places two entirely different statements. From what the Hon. Minister for Finance has said it is clear that the colleges would be started within 2 to 3 years. From what the Hon. Leader of the House said it is clear he wants the thing to be postponed; he does not want the colleges to be started now. There is thus vital difference of opinion in regard to policy matters between the Hon. Minister for Finance and Hon. Leader of the House.

When the session is on, when the Legislature is in session (I request the Hon. Speaker to hear what I say, this is a vital point of Order) we should know first what exactly is the policy of the Government. Let the Hon. Leader of the House or Hon. Chief Minister make a clear statement of Policy. That is Point No. 1. The other point is whether Hon. Ministers can make policy statements outside when the Legislature is in session, without making the statement first in the House. I want the Hon. Speaker to give his ruling on this Point of Order.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் மறுபடியும் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடானது இல்லை. ஸ்டேட்மெண்ட் இரண்டும் தவறானது அல்ல. அப்படி ஒரு தோற்றம் இருக்கிறதே தவிர இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்ததுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

நான் கூறியது எல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேலத்திலும் திருச்சியிலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன என்று சொன்னேன் (குறுக்கீடு) நான் கொடுத்த ஸ்டேட்மெண்ட்.

'DR. H. V. HANDE : When will the Fourth Plan end?'

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1974-லே ஓவராகிறது எங்களுடைய கணக்குப்படி இது இரண்டாவது வருஷம். உங்களுடைய கணக்குப்படி என்னவோ ?

(DR. H.V. HANDE : Ours is 'plan Holiday').

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 'நான் கூறியதெல்லாம் There is a proposal to start two new Medical Colleges in our State in the fourth plan period.

என்றுதான் சொன்னேன். அவை சேலத்திலும் திருச்சியிலும் ; இவையெல்லாம் அரசாங்கம் எடுத்த முடிவுதான். நமக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலும் அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் சொன்னதற்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் சொன்னதற்கும் முரண்பாடு இல்லை. அவர்களிடத்தில் நிருபர்கள் வியாழக்கிழமை வந்துவிடுமா, வெள்ளிக்கிழமை வந்துவிடுமா என்பதுபோலக் கேட்டிருக்கக்கூடும். அவர்கள் இருக்கக்கூடிய வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து--நிதிச் சங்கடம், படித்த மாணவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாவற்றையும் சுட்டிக் காட்டி உடனடியாக வருவதற்கு இடம் இல்லை என்றே தெரிவித்திருக்கிறார்கள். அதுபோன்ற செயற்குறிப்பே இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை.

மேலும் இது கொள்கை சம்பந்தப்பட்டதும் அல்ல. இந்த சட்டமன்றத்தில் சொல்லாது வெளியில்தான் சொல்லவேண்டும் என்கிற எண்ணமும் இல்லை. இதுபோன்ற விஷயங்களைக்கூட காதிகாரிகலாக வெளி நிகழ்ச்சிகளில் பேசும்போது குறிப்பிடக் கூடாது என்றால் அமைச்சர்கள் வெளி நிகழ்ச்சி எதிலுமே கலந்து கொள்ளக்கூடாது என்றாகிவிடும். அப்படி அவர்களுக்குப் பூட்டுப் போடுவது சரியல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : "கூச்சல் போடுவது" என்று எப்படிச் சொல்லலாம். அந்த வார்த்தையைத் திரும்பப்பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூச்சல்போடுவது என்று என்று எங்கே சொன்னார் ? பூட்டுப் போடுவது என்றுதான் சொன்னார்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order ......

DR. H. V. HANDE : Sir, the Chair has not given its ruling on the point of Order raised by me.

THIRU K. VINAYAKAM : Sir, I am raising a point of order on the speech rendered by the Hon. Minister which is incomplete ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்ப்ளீட் ஆகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகுதிரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் ஒரு ஒழுங்கு பிரச்னை எழுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன். நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதற்கும், நான் சொன்னதற்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. அவர் சொன்னது ப்ரபோசலைப்பற்றியது. நான் சொன்னது உடனடி சாங்ஷனைப் பற்றியது.

மருத்துவக் கல்லூரி வருவதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்றால் இருக்கிறது, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சேலத்தில் ஒரு கல்லூரியும், திருச்சியில் ஒரு கல்லூரியும் வருவதற்கு செயற்குறிப்பு இருக்கிறது என்பது உண்மையாகும். அதை அவர் சொல்லியிருக்கிறார். உடனடியாக வருமா என்பதற்கு நான் உடனடியாக வருவதற்கு முடியாததற்கான காரணங்களைச் சொன்னேன். உடனடியாக ஏற்படுகிற சூழ்நிலை இல்லை என்பதைத்தான், சாங்ஷனைப்பற்றி நான் குறிப்பிட்டேன்.

சட்டமன்றத்திற்குக்கூட அழகான வேறு ஒரு கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இருக்கிறது. உடனடியாக கட்ட சாங்ஷன் ஆகி விட்டதா என்று கேட்டால் இல்லை என்று சொல்வது தவறாகாது.

செக்ரடேரியட்டுக்கே தனியாக பெரிய கட்டிடம் கட்ட செயற்குறிப்பு இருக்கிறது. உடனடியாக நிறைவேற்றுவதற்கு சாங்ஷன் இல்லை. இதுபோல நிதி அமைச்சர் அவர்கள் ப்ரபோசலைப்பற்றிய முதல் பகுதியைத்தான் சொன்னார். இரண்டாம் பகுதியை நான் சொன்னேன். இதில் முரண்பாடு எப்படி இருக்க முடியும்?

விண்ணபங்கள் வந்தனவா, கோரிக்கைகள் இருக்கின்றனவா? செயற்குறிப்பு ஏதேனும் உண்டா என்றால் விண்ணப்பங்கள் வந்தன, நீண்டகாலமாக கோரிக்கைகள் இருந்துகொண்டிருக்கின்றன. திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. இதைத்தான் அவர் சொன்னார். இப்போது உடனடியாக ஏற்படுகிற சூழ்நிலை உண்டா என்று என்னிடம் கேட்டதற்கு இல்லை என்று நான் சொன்னேன். அதற்கான காரணங்களையும் சொல்லியிருக்கிறேன். மேலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10 மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்த இந்திய அரசாங்கத்திடம் செயற்குறிப்பு இருக்கிறது: அந்த பத்து கல்லூரிகளில் நமக்கு இரண்டும் கிடைக்குமா இல்லை ஒன்றாவது கிடைக்குமா என்பது அவர்களுடைய சாங்ஷனைப் பொறுத்த விஷயம். அதோடு இப்போதே படித்த மாணவர்களுக்கு மூன்று நான்கு மாதமாக வேலை கிடைக்கவில்லை என்கிற நிலை இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு உடனடியாக வராது என்று எடுத்துச் சொன்னேன்.

சட்டமன்றம் நடக்கிறபோது முக்கியமான கொள்கை அறிவிப்பை சட்டமன்றத்தில் செய்வதுதான் மரபு. இது கொள்கை அறிவிப்பு இல்லை. சட்டமன்றத்தில் முதலில் சொல்லக்கூடாது என்கிற உள்நோக்கத்தோடு வெளியில் சென்று சொன்னதும் இல்லை. அந்தக் கல்லூரி விழாவிலே கலந்துகொள்ளும்போது அது சம்பந்தப்பட்ட விவரங்களை "பாசிங்" ரிமார்க்ஸ் ஆகத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதன்பேரில் என்னிடம் நிருபர்கள் கேட்டதற்கு நான் இப்போதுள்ள நிலையைத்தான் சொன்னேன். தவறான நம்பிக்கை ஏற்பட்டுவிடுமானால் அது தவறாக அமைந்துவிடும் என்ற காரணத்தினால் செயற்குறிப்பு உண்டு, உடனடியாக சாங்ஷன் செய்ய வசதியில்லை என்றேன். இதில் முரண்பாடு எதுவும் இல்லை. சபையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பு செய்த கொள்கை விளக்கமும் அல்ல. ஆகவே இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, one Hon. Minister says that it is a passing remark and another Hon. Minister says that it is a categorical statement...

The Hon. Thiru K. A. MATHIALAGAN: It is a categorical statement. We have got proposals to have two more colleges...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகிய இரண்டு பேர்களும் சொல்லியிருப்பதில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லை. மேலும் கல்லூரிகள் திறக்கப்படும், திறக்கப்படாது என்பது எல்லாம் கொள்கை விளக்கமும் ஆகாது.

<u>திரு. பி. ஜி. கருத்திருமன்:</u> இவ்வளவு சீரியசான விஷயத்தை 'பொழுது போக்கு' என்று சொன்னார்களே, அப்படிச் சொல்லலாமா? அப்புறம் சட்ட சபை நடத்துவது பொழுதுபோக்கு என்பார்கள். * பத்திரிகையில் வந்தது. அதை நாங்கள் நம்புகிறோம். இதைப் பொழுதுபோக்கு என்று எப்படிச் சொல்லலாம்?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறபோது "நிதி அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னார்கள், கல்வி அமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்களே, எது சரி?" என்று கேட்டிருக்கலாம். ஆனால் "இதற்கு உங்களுக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுதான் காரணமா?" என்று கேட்டார்கள்.

<u>திரு. பி. ஜி. கருத்திருமன்:</u> நான் கேட்பது எல்லாம் அவர் பொழுதுபோக்கு என்று எப்படிச் சொல்லலாம்?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்படி முரண்பட்ட கருத்துக்குக் காரணம் என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அளவோடு நின்று கேட்டிருக்கலாம். அது இல்லாத காரணத்தினுல் அதற்கு பதில் வேறு வகையில் வந்து விடுகிறது. ஆகவே, வார்த்தைகளை நாம் சொல்கிற நேரத்தில் எண்ணிப் பார்த்துப் போடவேண்டும் என்பதை மன்றத்தில் இருக்கிற எல்லோருக்கும் சொல்லிக் கொள்கிறேன்.

" மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க செயற் குறிப்பு இருக்கிறது, உடனடியாக எடுத்துக்கொள்ள சாங்ஷன் இல்லை ' என்பது எல்லாம் கொள்கை விளக்கம் ஆகாது. நிதி அமைச்சருடைய கருத்துக்கு முரண்பட்ட கருத்தை கல்வி அமைச்சர் அவர்களும் சொல்லியிருப்பதாக ஆகாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நிதி அமைச்சர் அவர்கள் காடிகாரிகலாகச் சொன்னதாகச் சொன்னுர்கள். கல்வி அமைச்சர் அவர்கள் பாசிங் ரிமார்க்காகத்தான் சொன்னுர்கள் என்கிறுர்கள். இதுவே முரண்பட்டது இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி விரிவாகவே சொல்லப்பட்டுவிட்டது. முதலாவதாக இது கொள்கை விளக்கம் அல்ல. அப்படியே இருந்தாலும் இது அவையில்தான் அறிவிக்கப்படவேண்டும், வெளியில் அறிவிக்கக் கூடாது என்பதற்கு ரூல் எதுவும் இல்லை. அவையில்தான் அறிவிப்பது என்பது ஒரு மரபு. ஒரு கர்டிசி. விதிகளில் அதுபோன்ற நிலை இல்லை. ஆயினும் இது கொள்கை விளக்கமும் அல்ல. ஆகவே, எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவையின் மரபிற்கு மாறுன சொத்துகளை பயன் படுத்துவது குறித்து

THIRU K. VINAYAKAM : Sir, on another point of order. There are certain words which are known as parliamentary words and there are certain other words which are known as unparliamentary words. For instance, * * has been declared as an unparliamentary word and it should not be used in a public assembly like this. Tere is another expression * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விநயகம், நீங்கள் உட்காருங்கள். இதிலே நீங்கள் சொல்லிய இந்த பேச்சிலேயே ' பாயின்ட் ஆப் ஆர்டர் " வருகிறது. * * * * என்று இந்த சொற்களை பயன்படுத்திப் பேசியதாலே இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வருகிறது. இந்தச் சொற்களும் ரெக்கார்டு ஆகக்கூடிய அளவுக்கு வரும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.